LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka.

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part I Examination in Business Administration - 2007 / 2008 (June 2011) (Proper/Repeat)

## EXB 202 Advanced Financial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது. நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

AMB plc கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ.10 விலையான 50000 புதிய சாதாரண பங்குகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை பொதுமக்களிடமிருந்து கோரியது. இப் பங்கு வழங்கலுக்கான பணம் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்பட்டது:

| | பங்கு ஒன்றுக்கு ரூபா |
|---|---|
| விண்ணப்பத்தில் | 3 |
| ஒதுக்கத்தில் | 4 |
| அழைப்பில் | 3 |
| | 10 |

75000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. ஆயினும் பின்வரும் விகிசார அடிப்படையில் பங்குகளுக்கான ஒதுக்கல் செய்யப்பட்டன.

40000 பங்குகளுக்கான விண்ணப்பதாரிகளுக்கு 30000 பங்குகள் ஒதுக்கல் செய்யப்பட்டன.
30000 பங்குகளுக்கான விண்ணப்பதாரிகளுக்கு 20000 பங்குகள் ஒதுக்கல் செய்யப்பட்டன.

மேற்கூறப்பட்ட ஒழுங்கின் படி பங்குகளுக்கான ஒதுக்கீடும் அழைப்பும் மேற்கொள்ளப்பட்ட போது 40000 பங்குகளுக்கான விண்ணப்பதாரிகளின் குழுவிலுள்ள சுந்தர் எனும் விண்ணப்பதாரி அவருக்கு ஒதுக்கப்பட்ட 1200 பங்குகளுக்குரிய ஒதுக்கல் பணத்தை செலுத்தத் தவறி விட்டார். அவரது பங்குகள் யாவும் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் அழைப்பு விடப்பட்ட போது 30000 பங்குகளுக்கான விண்ணப்பதாரிகளின் குழுவிலுள்ள றிஸ்வான் எனும் விண்ணப்பதாரி அவர் விண்ணப்பித்திருந்த 700 பங்குகளுக்குரிய அழைப்புப் பணத்தை செலுத்தத் தவறினார். அவரது பங்குகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் றிஸ்வானின் பங்குகள் உட்பட 1000 பங்குகள் பங்கு ஒன்று ரூ.8 விலையில் முற்றாகச் செலுத்த வேண்டியதாகவும் இதற்கான பணத்தை உரிய நேரத்தில் பெறும் விதமாகவும் மீள வழங்கல் செய்யப்பட்டன. ஏனைய பங்குகளுக்குரிய பணமும் மீள வழங்கப்பட்ட பங்குகளுக்குரிய பணமும் உரிய நேரத்தில் பெறப்பட்டன.

வேண்டப்படுவது.

(i) தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக (காசு உட்பட)

(ii) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக

(20 புள்ளிகள்)

**02.** 31.12.2010 இல் உள்ளவாறான M கம்பனியினதும் N கம்பனியினதும் ஐந்தொகைகள் பின்வருமாறு:

| | M கம்பனி ரூபா | N கம்பனி ரூபா |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 420000 | 300000 |
| இலாப நட்டக் கணக்கு | 240000 | 150000 |
| கடன்கொடுத்தோர் | 240000 | 250000 |
| | **900000** | **700000** |
| காணி கட்டடம் | 260000 | 200000 |
| தளபாடமும் பொருத்திகளும் | 200000 | 140000 |
| இருப்புக்கள் | 80000 | 100000 |
| கடன்பட்டோர் | 220000 | 180000 |
| காசும் வங்கியும் | 140000 | 80000 |
| | **900000** | **700000** |

01.01.2011 இல் M கம்பனியானது N கம்பனியை பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஈர்ப்பு செய்தது:

1. N கம்பனியின் சாதாரண பங்குதாரருக்கு பங்கு ஒன்றிக்கு M கம்பனியின் ஒரு சாதாரண பங்கினை பங்கு ஒன்று ரூபா. 12/- விலையில் வழங்குதல்
2. N கம்பனியின் சொத்துக்களும் (காசு மற்றும் வங்கி மீதியைத் தவிர) பொறுப்புக்களும் பின்வரும் பெறுமதியில் M கம்பனியால் கையேற்கப்படுதல்.

| | ரூபா |
|---|---|
| காணி கட்டடம் | 240000 |
| தளபாடம் பொருத்திகள் | 120000 |
| இருப்புக்கள் | 90000 |
| கடன்பட்டோர் | 170000 |
| கடன்கொடுத்தோர் | 236000 |

3. கலைப்புச் செலவு ரூ.10000 N கம்பனியால் செலுத்தப்பட்டது.

30 DEC ?
Eastern University, Sri Lanka

வேண்டப்படுவது.

i. N கம்பனியின் கணக்கேடுகளை மூடுவதற்கான பொருத்தமான பேரேட்டு கணக்குகளைத் தயாரிக்குக.

ii. M கம்பனியின் ஏடுகளில் N கம்பனியின் கொள்வனவு தொடர்பான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக

**(20 புள்ளிகள்)**

31.12.2010 இல் உள்ளவாறான ABC கம்பனியின் ஐந்தொகை பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | ரூபா | சொத்துக்கள் | ரூபா |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 ) | 200000 | காணி கட்டடம் | 250000 |
| 12% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10) | 400000 | தளபாடமும் பொருத்திகளும் | 150000 |
| இலாப நட்டக் கணக்கு | 120000 | முதலீடுகள் | 250000 |
| பொது ஒதுக்கம் | 200000 | இருப்புக்கள் | 100000 |
| கடன்கொடுத்தோர் | 80000 | கடன்பட்டோர் | 50000 |
| | | காசும் வங்கியும் | 200000 |
| | **1000000** | | **1000000** |

12% மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகள் அனைத்தும் 01.01.2011 இல் மீட்கப்பட்டன. ரூ.150000 பெறுமதியான முதலீடுகள் கொள்விலையுடன் 10% கூட்டிய விலையில் விற்கப்பட்டன. மீட்புக்கு கிடைக்கத்தக்க வருமான ஒதுக்கங்களை எல்லாவற்றையும் பயன்படுத்திய பின்னர் மிகுதிக்கு போதுமான அளவு புதிய சாதாரண பங்குகள் வழங்கப்பட்டன. முன்னுரிமைப் பங்குதாரருக்குரிய கொடுப்பனவுகள் யாவும் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

(அ) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகள்

(ஆ) முன்னுரிமை பங்குகள் மீட்பின் பின்னரான ஐந்தொகை

**(20 புள்ளிகள்)**

Eastern University, Sri Lanka
30 DEC 2011

SKG ட்ரவல்ஸ் கம்பனியானது KVC மோட்டர்ஸ் கம்பனியிடமிருந்து வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் ட்ரக் வண்டி ஒன்றை 01.01.2006 இல் கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி ரூ.147150 உடன் காசாசையும் 31.12.2006 இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ரூ.270570 வருடாந்த தவணைக் கட்டணத்தை ஐந்து ஆண்டுகளுக்கு செலுத்துதல் வேண்டும். வாடகைக் கொள்வனவு வட்டி வீதம் ஆண்டுக்கு 11% ஆகும். இவ்வட்டி வருடாந்த தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கியுள்ளது.

வேண்டப்படுவது :

1. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டியையும் வருடாந்த வட்டியையும் கணிக்க.

2. ட்ரக் வண்டி காசு விலையைக் கணிக்க.

3. ட்ரக் வண்டி வாடகைக் கொள்வனவு விலை என்ன?

4. 2006, 2007, 2008, 2009, 2010 ஆண்டுகளுக்கு வாடகை கொள்வனவாளரின் ஏட்டில் காசு விலையைப் பதியும் முறையில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக:

   i. ட்ரக் வண்டி கணக்கு
   ii. SKG ட்ரவல்ஸ் கம்பனிக் கணக்கு
   iii. வாடகை கொள்வனவு வட்டிக்கணக்கு

**(20 புள்ளிகள்)**